Chenkaantal
*A Bi-Yearly Peer-Reviewed Tamil Journal*

**Volume - 1, Special Issue - 1, January 2022** **E-ISSN: 2583-0481**

# Thoughts of Instability in *Thirumanthiram*

**Dr. M. Karthika,** Guest Lecturer of Tamil, Govt.Arts College For Women, Salem 636 008.
**ORCiD: https://orcid.org/0000-0001-6843-7194**
**DOI: 10.5281/zenodo.6619409**

## Abstract

*Those who have realized the truth can know that the siddhas were 'thought-out siddhanta' by valmikar and tirumular by saying 'thought-clear'. Those who know the state in which the human mind is bound in the triads of arrogance, delusion and delusion are the siddars. The siddhar songs guide the people to recover from it and to cultivate theology and develop divine thinking. In Tirumular "Thirumanthiram", instability is emphasized through songs so that human beings can live in a state of detachment. This article explores the thoughts of instability of life.*

**Keywords:** *Thirumanthiram*, Instability, Delusion, Siddharkal, Divinity.

## References

[1] A. Arivoli. *Siddhar Padalkal, (Part I).* Varthamanan Pathippakam, First Edition 2019.
[2] M. Sundharesan. *Siddharkal Varalaru*. Varthamanan Pathippakam, First Edition 2019.
[3] E.Ve.Ra., *Thirukkural.* Thiruvalluvar Pathippakam, Third Edition 2003.
[4] A. Manickam. *Thirumanthiram*, (Part I & II) Varthamanan Pathippakam, First Edition 2019.

**Author Contribution Statement:** NIL.
**Author Acknowledgement:** NIL.
**Author Declaration:** I declare that there is no competing interest in the content and authorship of this scholarly work.
The content of the article is licensed under https://creativecommons.org/licenses/by/4.0/ International License.

மலர் - 1, சிறப்பிதழ் 1, தை 2053 இ - ஐ எஸ் எஸ் எண்: 2583-0481

# திருமந்திரத்தில் நிலையாமைச் சிந்தனைகள்

**முனைவர் மு.கார்த்திகா,** கௌரவ விரிவுரையாளர், தமிழ்த்துறை, அரசினர் மகளிர் கலைக்கல்லூரி, சேலம்-8.
**ORCiD: https://orcid.org/0000-0001-6843-7194**
**DOI: 10.5281/zenodo.6619409**

**ஆய்வுச்சுருக்கம்**

*தமிழ் இலக்கியங்கள் மனிதவாழ்க்கைக்குரிய நன்னெறிகளை வகுக்கின்றன. மனிதர்களிடையே காணப்படக்கூடிய காமம், கோபம், ஆசை இவற்றை நீக்கினாலே பேரானந்தமாக வாழலாம் என்பது சான்றோர்கள் கண்ட உண்மை. நல்லெண்ணமே நம் வாழ்க்கையைச் சீர்படுத்தும் என்பதை அனைவரும் அறிந்ததே. அவ்வகையில் சித்தர்களில் முதன்மையானவரான திருமூலர் மக்களுக்கு நிலையாமையைத் தெளிவுப்படுத்தி அறக்கருத்துகளை உணர்த்தியுள்ளார். அறவாழ்வுக்கு வழிவகுக்கும் திருமந்திரப் பாடல்களின் வழி நிலையாமைச் சிந்தனைகள் உணர்த்தப்படுகின்றது.*

**திறவுச்சொற்கள்**: திருமந்திரம், நிலையாமை, சித்தர்கள் சிந்தனை, திருமூலர்.

**முன்னுரை**

தமிழ் இலக்கியங்கள் மனிதவாழ்க்கைக்குரிய நன்னெறிகளை வகுக்கின்றன. மனிதர்களிடையே காணப்படக்கூடிய காமம், கோபம், ஆசை இவற்றை நீக்கினாலே பேரானந்தமாக வாழலாம் என்பது சான்றோர்கள் கண்ட உண்மை. நல்லெண்ணமே நம் வாழ்க்கையைச் சீர்படுத்தும் என்பதை அனைவரும் அறிந்ததே. அறிந்தும் சில தவறுகளை மனிதமனம் செய்யத்துணிகின்றது. நிலையில்லா வாழ்க்கையில் எப்பொருள்மீதும் பற்றின்றி 'இறைவனே கழல் இறைஞ்சுகிறேன்' என்று எல்லா வேளையும் அவன் தாள் பற்றி வாழ்வோர்க்கு எக்குறையும் இல்லை என்பதே சமயச்சான்றோர்கள் வலியுறுத்தும் கொள்கையாகும். அவ்வகையில் சித்தர்களில் முதன்மையானவரான திருமூலர் மக்களுக்கு நிலையாமையைத் தெளிவுப்படுத்தி அறக்கருத்துகளை உணர்த்தியுள்ளார். அறவாழ்வுக்கு வழிவகுக்கும் திருமந்திரப் பாடல்களின் வழி நிலையாமைச் சிந்தனைகள் குறித்து ஆய்வதே இக்கட்டுரையின் நோக்கமாக அமைகிறது.

**திருமந்திரம்**

சைவ சமயத்தின் பெருமைகளை எடுத்துரைக்கும் பன்னிருதிருமுறைகளில் பத்தாம் திருமுறையாக திருமந்திரம் போற்றப்படுகிறது. கயிலை மலையில் வசித்த சித்தர் சுந்தரானந்தர். இவர் பூவுலகிற்கு வந்து திருவாவடுதுறையில் உள்ள இறைவனை வழிபட்டு திரும்பும் வழியில் மூலன் என்ற இடையன் இறந்துகிடந்தான். அவனுடன் மேய்ச்சலுக்கு வந்து மாடுகள் அவன் நிலையைக்கண்டு சுற்றிநின்றதைப் பார்த்த சுந்தரானந்தர் வருத்தப்பட்டு எண்வகைசித்திகளில் ஒன்றாகிய கூடுவிட்டு கூடுபாய்தல் சித்தியைக் கையாண்டு (பரகாயப்பிரவேசம்) மூலனின் உடலில் தனது ஆன்மாவை செலுத்தினார். மூலன் எழுந்ததைக் கண்ட மாடுகள்; மகிழ்ந்தன. மாடுகளை ஓட்டிக்கொண்டு இல்லத்திற்கு வந்த தன் கணவனைக் கண்டு தழுவ சென்றவளிடம் பெண்ணேஇ உடல் உன் கணவருடையது உள்ளிருக்கும் ஆன்மா வேறு என தெளிவுபடுத்திவிட்டு தன் உடலை தேடி வருகிறார்.

அவருடைய உடல் அங்கு இல்லாததால் நிரந்தரமாக அந்த உடலிலேயே நடமாடினார். இதனால் அவர் திருமூலர் என்ற திருப்பெயரால் அழைக்கப்பட்டார். திருவாவடுதுறையில் மூவாயிரம் ஆண்டுகள் நி~;டையிலிருந்து ஆண்டுக்கொரு பாடலாக கண்விழித்து அவர் பாடிய பாடல்களின் தொகுப்பு திருமந்திரம் ஆகும். தமிழ் மூவாயிரம், திருமந்திரமாலை என்னும் சிறப்புப் பெயர்களைக் கொண்டிருக்கும் இந்நூலின் பாடல்களைக் கண்டெடுத்தவர் திருஞானசம்பந்தர். திருமூலர் தவம் செய்த திருவாவடுதுறை நவகோடிச்சித்தபுரம் என்றழைக்கப்படுகிறது. ஒன்பது தந்திரங்களில் வாழ்க்கைக்குரிய அரிய பல கருத்துகளால் மண்ணில் நல்ல வண்ணம் வாழ்வதற்கு அறிவுறுத்தியுள்ளார்.

**நிலையாமை**

'வாழ்வாவது மாயம் மண்ணாவது திண்ணம்' என்பர். வாழ்க்கை உறுதியில்லாதது (நிலையாமை) என்பதை திருமூலர் தனது பாடல்களில் முதல் தந்திரத்தில், 1. யாக்கை நிலையாமை, 2. செல்வம் நிலையாமை, 3. இளமை நிலையாமை, 4. உயிர் நிலையாமை என்னும் பிரிவுகளில் தெளிவுபடுத்தியுள்ளார். ஆகையால் நிலையில்லா வாழ்க்கையில் முப்பொழுதும் சிந்தையில் சிவனை நினைக்க வேண்டும். அவன் தாள் பற்றுவோர்க்கு இன்னல்கள் ஏதும் வராது என்றும் அவனை வணங்காதவர்கள் மீண்டும் மீண்டும் பிறப்பெடுத்து அல்லலுற வேண்டும் (திரு.மந்.143)1 என்று அறிவுறுத்துவதுடன் வீடுபேறு அடைவதற்கான வழியையும் குறிப்பிட்டுள்ளார். பாசத்தை (மும்மலங்கள்) கட்டுடைத்து வாழும் போது இறுதியில் பசு (ஆன்மா) வானது பதியை (இறைவன்) சென்றடையும் என்பதை,

**"நரை பசு பாசத்து நாதனை உள்ளி**
**உரை பசு பாசத்து ஒருங்க வல்லார்க்குத்**
**திரை பசு பாவச் செழுங்கடல் நீந்திக்**
**கரை பசு பாசம் கடந்து எய்தலாமே"2 (திரு.மந்.49)**

என்னும் அடிகளின் மூலம் தெரிந்துகொள்ள முடிகிறது. இதை வள்ளுவமும்,

**"பிறவிப் பெருங்கடல் நீந்துவார் நீந்தார்**
**இறைவனடி சேரா தவர்"3 (குறள்:10)**

என்று குறிப்பிடுவதன் வழி தெளியலாம்.

**யாக்கை நிலையாமை**

யாக்கை என்பதன் பொருள் உடல். உயிரே உடலை இயக்குகின்றது. மனிதன் மரணித்த வேளையில் அவன் உடல்தான் புதைக்கப்படுகிறது (அ) எரிக்கப்படுகிறது. அவனுள் இருந்த ஆன்மாவிற்கு அழிவில்லை அவன் செய்த கர்மவினைக்கு ஏற்ப வேறோரு உடலை சென்றடையும் என்பதை,

**"கூடுகெடின் மற்றோர் கூடுசெய் வானுளன்**
**நாடுகெடினும் நமர்கெடு வாரில்லை**
**...பாடது நந்தி பரிசறி வார்க்கே"4 (திரு.மந். 2852)**

என்னும் வரிகளால் அறியமுடிகிறது. இதனால் பிறப்பு என்பது உயிர்களின் கர்மவினைகளால் நடைபெறுவதை அறியலாம். மேலும், குயவனால் வனையப்பட்ட மட்பாண்டம் உடைந்து போனால் கூட மக்கள் பயன்படுத்துவர். ஆனால் பிரம்மனால் படைக்கப்பட்ட இவ்வுடலிலிருந்து உயிர் பிரிந்த

உடனே, பிணம் என்று வீட்டிற்கு வெளியே வைப்பர். இறந்த உடலிடமிருந்து உற்றார் உறவினர்களுக்கு இருக்கும் அன்பு நீங்குவதை,

**“ஊரெலாம் கூடி ஒலிக்க அழுதிட்டுப்**
**பேரினை நீக்கிப் பிணம்என்று பேர்இட்டு**
**சூரைஅங் காட்டிடைக் கொண்டுபோய்ச் சுட்டிட்டு**
**நீரினில் மூழ்கி நினைப்பு ஒழிந்தார்களே”5 (திரு.மந். 145)**
**“பந்தல் பிரிந்தது பண்டாரம் கட்டுஅற்ற**
**ஒன்பது வாசலும் ஒக்க அடைத்தன**
**துன்புஉறு காலத் துரிசுவர மேன்மேல்**
**அன்புடை யார்கள் அழுதுஅகன் றார்களே”6 (திரு.மந். 152)**

எனும் வரிகளில் திருமூலர் உண்மை நிலையை உணர்த்தியுள்ளார்.

**செல்வம் நிலையாமை**

பொருட்செல்வத்தை நிலையில்லாதவை என்று குறிப்பிடும் திருமூலர் பொருளாசையை விடுத்து இறைவன் திருவடிகளை இறைஞ்சுவதே நிலையான செல்வமாக வலியுறுத்துகிறார்.

**“கொண்ட விரதமும் ஞானமும் அல்லது**
**மண்டி அவருடன் வழி நடவாதே” 7 (திரு.மந்.144)**

என்று திருமந்திரம் ஒருவனின் இறுதிகாலத்தில் அவன் உடன் வருவனவற்றைக் குறிப்பிடுகிறது. மேலும், செல்வம் உடையவர்களுக்க்கு இன்பமன்றி துன்பமே உண்டாகும். மலை போன்ற செல்வம் ஒருவன் வைத்திருந்தாலும் உயிர் பிரிந்த பின்பு அதை கொண்டு செல்ல முடியாது. எனவே, பொருளுக்காக அலையும் வாழ்க்கையை விடுத்து வாழ்க்கையின் மெய்மையை உணர்ந்து வாழ வேண்டும் என்பதை உரைக்கின்றார். இதை, (திரு.மந். 170)8 என்ற பாடல்; வழி அறியமுடிகிறது.

**இளமை நிலையாமை**

**“பாலன் இளையன் விருத்தன் எனநின்ற**
**காலம் கழிவன கண்டும் அறிகிலார்” 9 (திரு.மந்.181)**

என்ற வரிகள் இளமைத் தன்மை மாறும் இயல்பினை குறிப்பிடுகிறது. இதை அறியாது செயல்படும் மக்களை இளமையிலேயே சிவனை வணங்குங்கள் அறத்தை மேற்கொள்ளுங்கள் முதுமையில் அரியச் செயல்களைச் செய்வது கடினம் என (திரு.மந். 179)10 திருமூலர் தெளிவுப்படுத்துகிறார்.

**உயிர் நிலையாமை**

உடலிலிருந்து பிரிந்த உயிர் மீண்டும் அதனுள் உட்புகாது. ஆண்டாண்டு அழுதாலும் மாண்டார் மீண்டு வாரார். இதை,

**“கறந்தபால் முலைப்புகா, கடைந்த வெண்ணெய் மோர்புகா:**
**உடைந்துபோன சங்கின்ஓசை உயிர்களும் உடற்புகா:**
**விரிந்தபூ உதிர்ந்தகாயும் மீண்டுபோய் மரம்புகா: (சித்.பா: 48 )**
**இறந்தவர் பிறப்பது இல்லை இல்லையே”11**

என்ற அடிகள் எடுத்துரைக்கிறது. உடலில் உயிர் இருக்கும் வரை இன்பம் தரும் நல்லனவற்றை நாடி ஒழுக்கமுடன் வாழ்ந்து இறை வழிபாட்டை மேற்கொள்ளுங்கள் என (திரு.மந்.195)12 அறிவுறுத்துகிறார்.

**முடிவுரை**

'பிறந்ததெல்லாம் இறந்து போகும்' இது நியதி. பிறப்புக்கும் இறப்புக்கும் இடைப்பட்ட வாழ்க்கையில் இளமை, செல்வம், யாக்கை, உயிர் இவை நிலையில்லாதவை என்பதையும். நம் விதிக்கான காரணம் நாம் ஆற்றிய கர்ம வினை. அது நீங்க அறம் பலவற்றை செய்யவேண்டும் என்பதும் இக்கட்டுரையின் வழி பெறப்படுகிறது. மக்களிடையே நிலையாமைச் சிந்தனைகளை மனதில் பதித்து அறம் புரிந்து வாழ்வதற்கான நன்னெறியைக் காட்டும்; அறஇலக்கியமாகவும், பக்தி இலக்கியமாகவும் திருமந்திரம் திகழ்கின்றது என்பதை அறியலாம்.

**துணை நூற்பட்டியல்**

[1] அ. அறிவொளி. *சித்தர் பாடல்கள், (தொகுதி I)*, வர்த்தமானன் பதிப்பகம், முதற்பதிப்பு 2019.
[2] மு. சுந்தரேசன். *சித்தர்கள் வரலாறு*. வர்த்தமானன் பதிப்பகம், முதற்பதிப்பு 2019.
[3] ஈ.வே.இரா., *திருக்குறள்*. திருவள்ளுவர் பதிப்பகம், மூன்றாம் பதிப்பு 2003.
[4] அ.மாணிக்கம். *திருமந்திரம், (தொகுதி I & II),* வர்த்தமானன் பதிப்பகம், முதற் பதிப்பு 2019.

**நிதிசார் கட்டுரையாளர் உறுதிமொழி:** இல்லை.
**கட்டுரையாளர் நன்றியுரை:** இல்லை.
**கட்டுரையாளர் உறுதிமொழி:** இக்கட்டுரையில் எவ்வித முரண்பாடும் இல்லை.

இக்கட்டுரை கிரியேட்டிவ் காமன்சு ஆட்ரிபியூசன் 4.0வின் https://creativecommons.org/licenses/by/4.0/ கீழ் பன்னாட்டு உரிமம் பெற்றுள்ளது.